

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 நவம்பர் 28, 2019 புரட்சி 18 முழக்கம் 46 விலை: ரூ.3.00

# பார்ப்பனர்கள் வன்முறைப் பேச்சுகள்: அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

*சமூக அமைதியைக் குலைக்கும் நோக்கத்தோடு இரு பிரிவினருக்கு மிடையே மோதலையும் பதற்றத்தையும் உருவாக்கிடும் கருத்துகளைத் தெரிவித்த பார்ப்பனர்கள் மீது அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் சார்பில் 22.11.2019 அன்று நடந்த சென்னை செய்தியாளர் சந்திப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேட்டார். புகார்கள் தரப்பட்டு வழக்குப் பதிவு செய்த பிறகும் கைது செய்யப்படாததோடு, புகார் மனுவைப் பெற்றுக் கொண்டு காவல்துறை வழக்குப் பதிவு செய்ய மறுப்பதையும் பேட்டியில் கொளத்தூர் மணி சுட்டிக் காட்டினார். பேட்டி விவரம்:*



“கேரளாவில் நடந்த பிராமணர் உலக மாநாட்டில் பேசிய வெங்கடகிருஷ்ணன் என்ற பேராசிரியர் ஜாதி ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்தியதோடு ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை நாயுடன் ஒப்பிட்டும் பேசினார். பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான நாகை திருவள்ளுவன் நேரில் காவல்துறையிடம் புகார் அளித்தார். 153ஏ, 153பி, 5.5ஏ, 5.5பி உள்ளிட்ட பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. கைது செய்திருக்க வேண்டும். ஆனால் கைது செய்யவில்லை. அய்.அய்.டி.யில் தற்கொலை செய்து கொண்ட பாத்திமா என்ற இஸ்லாமிய மாணவி, தனது தற்கொலைக்குக் காரணம் சுதர்சன பத்மநாபன் என்று மரண வாக்குமூலம் போல தனது கைபேசியில் பதிவு செய்த பிறகும் அவரை கைது செய்யவில்லை. வழக்குப் பதிவு செய்வதற்குக்கூட காலம் கடத்துகிறார்கள். உள்துறை அமைச்சராகவும் நிதியமைச்சராகவும் இருந்தவரை சுவர் ஏறிக் குதித்து கைது செய்யும்போது, இவர்கள் மீது மட்டும் ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை!

கவிஞர் வைரமுத்து, ஆண்டாள் குறித்துப் பேசிய கருத்துக்காக எச். ராஜா, வைரமுத்து பிறப்பையே கேள்விக் கேட்டுப் பேசினார். நாங்கள் ஆண்டாள் குறித்து கொளத்தூரில் ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்தோம். கருத்தரங்கு நடப்பதற்கு முந்தைய நாள் அதைக் குறிப்பிட்டு எங்களுக்கும் சோடா புட்டி வீசத் தெரியும்; சைக்கிள் செயினை சுழற்றத் தெரியும் என்று மன்னார்குடி ஜீயர் வன்முறையைத் தூண்டி விட்டார். காவல்நிலையத்தில் புகார் தந்தோம். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வேலைக்குச் செல்லும் பெண்களில் 30 சதவீதம் பேர் தான் ஒழுக்கமானவர்கள் என்று பேசிய ஆடிட்டர் குருமூர்த்தி மீது புகார் தந்தும் நடவடிக்கை இல்லை. காயத்ரி ரகுராம் என்ற நடிகை, ‘சேரி கலாச்சாரம்’ என பேசிய பிறகும் அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. காஞ்சி விஜயேந்திரன், தமிழ்த் தேசிய நாட்டுப் பண் தமிழ் வாழ்த்துப் போடும்போது எழுந்து நிற்க மறுத்தார். ‘தேசிய கீதம்’ பாடும்போது எழுந்து நிற்கவில்லை என்றால் தேசிய அவமதிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும்போது விஜயேந்திரன் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

மக்கள் மதிக்கக்கூடிய அரசியல் தலைவர் திருமாவளவன், இந்துக் கடவுள்களைப் கேவலப்படுத்தி விட்டதாக அர்ஜுன் சம்பத் கூறினால் உடனே காவல்துறை வழக்குப் பதிவு செய்கிறது. இந்து மதத்தின் பெயரால் கட்சி நடத்துகிறவர்கள் இந்து மதம் என்ன கூறுகிறது என்பதைத் தெரிந்து கொண்டு கட்சி நடத்த வேண்டும். அக்னி ஹோத்திரம் தாத்தாச்சாரி எழுதி வைத்திருக்கிறார். அதைப் படித்தாவது புரிந்து கொள்ள வேண்டும். ‘சூத்திரன்’ என்று மனு சாஸ்திரம் இழிவு படுத்தியது. இது பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பு எழுதப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்னவென்றால் சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி என்பதுதான்.

பார்ப்பனர் என்றால் எதை வேண்டு மானாலும் பேசலாம். அவர்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதுபோல் செயல்படுவதை பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. புகார் தரப்பட்டவர்கள் வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கொளத்தூர் மணி கூறினார்.

பேட்டியின்போது கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் திருமுருகன் காந்தி, குடந்தை அரசன் ஆகியோர் உடனிருந்தார்.

## அயோத்தித் தீர்ப்பை மறு ஆய்வு செய்க: தடையை மீறி நடந்த ஆர்ப்பாட்டம்




பாசிச எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் அயோத்திப் பிரச் சினையில் உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி 21.11.2019 அன்று மாலை சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், மே 17 இயக்கத்தைச் சார்ந்த திருமுருகன் காந்தி, ஜவாஹிருல்லா (மனித நேய மக்கள் கட்சி), தெஹலான் பாகவி (எஸ்.டி.பி.அய்.), தனியரசு (சட்டமன்ற உறுப்பினர்) உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட அமைப்பைச் சார்ந்தவர்கள் உரையாற்றினர். அயோத்திப் பிரச்சினையில் சட்டங்களைப் புறக்கணித்துவிட்டு, நம்பிக்கை அடிப்படையில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, என்றும் மறு சீராய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திருமாவளவன் உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்கள், கழக மாவட்ட செயலாளர் இரா. உமாபதி உள்ளிட்ட 28 பேர் மற்றும் ஆயிரம் பேர்கள் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

## மருத்துவப் பட்டம் மேல் பட்டப் படிப்பில் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு பறி போகிறது

மருத்துவப் பட்டமேற்படிப்பிற்கான அகில இந்திய NEET PG 2020ஆம் ஆண்டிற்கான தேர்வில், அகில இந்தியத் தொகுப்பு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு இல்லை...

நாடு முழுவதும் உள்ள சுமார் 30,774 மருத்துவ பட்டமேற் படிப்பிற்கான இடங்களுக்கு (MD, MS) அகில இந்திய நீட் பீஜி தேர்வு ஜனவரி மாதம் மத்திய அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான குறிப்பாணையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிக்கையில் மொத்தமுள்ள 30,774 இடங்களில் 50% அதாவது, 15,387 இடங்களுக்கு மத்திய அரசே கவுன்சிலிங் மூலம் இடத்தை நிரப்பும்.

இந்த 15,387 இடங்களில் இப்போதுள்ள இடஒதுக்கீடு முறையில் 50 சதவீதம் (7,693 இடங்கள்) பொதுப்பிரிவிலும், 22.5 சதவீதம் (3,462 இடங்கள்) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கும், 27 சதவீதம் (4,155 இடங்கள்) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வழங்க வேண்டும்.

ஆனால், இந்த அறிவிக்கையில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு OBC மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் கல்லூரிகளில் மட்டுமே வழங்கப்படும் என்றும், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் இருந்து பெறப்படும் இடங்களில் OBC Reservation வழங்கப்படாது என்றும் குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம் கடந்த சில ஆண்டுகளாக மிகவும் சொற்பமான 300 இடங்கள் மட்டுமே OBC பிரிவினருக்கு கிடைக்கிறது. இந்த நிலை வரும் கல்வியாண்டிலும் தொடர்ந்தால் சுமார் 3,800 இடங்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கிடைக்காமல் போகும்.

ஆனால் இதே ஆணையில் பொதுப் பிரிவில் உள்ள உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 சதவீதம் EWS Reservation மொத்தமுள்ள 15,387 இடங்களிலும் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவப் பட்டமேற்படிப்பிற்கான அகில இந்திய NEET PG 2020ஆம் ஆண்டிற்கான தேர்வில், அகில இந்தியத் தொகுப்பு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு இல்லை.

நாடு முழுவதும் உள்ள சுமார் 30,774 மருத்துவப் பட்டமேற் படிப்பிற்கான இடங்களுக்கு (MD, MS) அகில இந்திய நீட் பீஜி தேர்வு ஜனவரி மாதம் மத்திய அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான குறிப்பாணையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிக்கையில் மொத்தமுள்ள 30,774 இடங்களில் 50% அதாவது, 15,387 இடங்களுக்கு மத்திய அரசே கவுன்சிலிங் மூலம் இடத்தை நிரப்பும்.

இந்த 15,387 இடங்களில் இப்போதுள்ள இடஒதுக்கீடு முறையில் 50 சதவீதம் (7,693 இடங்கள்) பொதுப் பிரிவிலும், 22.5 சதவீதம் (3,462 இடங்கள்) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கும், 27 சதவீதம் (4,155 இடங்கள்) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வழங்க வேண்டும்.

ஆனால், இந்த அறிவிக்கையில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு OBC மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் கல்லூரிகளில் மட்டுமே வழங்கப்படும் என்றும், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் இருந்து பெறப்படும் இடங்களில் OBC Reservation வழங்கப்படாது என்றும் குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம் கடந்த சில ஆண்டுகளாக மிகவும் சொற்பமான 300 இடங்கள் மட்டுமே OBC பிரிவினருக்கு கிடைக்கிறது. இந்த நிலை வரும் கல்வியாண்டிலும் தொடர்ந்தால் சுமார் 3,800 இடங்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கிடைக்காமல் போகும்.

ஆனால் இதே ஆணையில் பொதுப்பிரிவில் உள்ள உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 சதவீதம் EWS Reservation மொத்தமுள்ள 15,387 இடங்களிலும் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தான் இந்தியாவிலேயே அதிக அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. 1,758 மருத்துவ பட்டமேற்படிப்பிற்கான இடங்களை கொண்டு அதிலும் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக உள்ளது. இதில் 50 சதவீதம் அதாவது, 879 இடங்கள் மத்திய அரசிடம் தரப்படுகின்றன. இந்த 879 இடங்களில் தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடும் பின்பற்றப்படுவதில்லை. மத்திய அரசின் 27% ஒதுக்கீடும் தரப்படுவது இல்லை.

தமிழகத்தில் தான் இந்தியாவிலேயே அதிக அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. 1,758 மருத்துவ பட்டமேற்படிப்பிற்கான இடங்களை கொண்டு அதிலும் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக உள்ளது. இதில் 50 சதவீதம் அதாவது, 879 இடங்கள் மத்திய அரசிடம் தரப்படுகின்றன. இந்த 879 இடங்களில் தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடும் பின்பற்றப்படுவதில்லை. மத்திய அரசின் 27% ஒதுக்கீடும் தரப்படுவது இல்லை.

மருத்துவப் பட்டப் படிப்பில் என்ன நிலை?

நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. எம்.பி. டி.ஆர். பாலு பேசியதாவது:

2017-18ஆம் கல்வியாண்டில் மருத்துவப் படிப்புக்கான பொதுத் தொகுப்புக்கு9 ஆயிரத்து 966 இடங்களை மாநில அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் அளித்துள்ளது. இவற்றில் அரசியல் சட்டப்படி 2 ஆயிரத்து 689 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மாநில கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 260 மாணவர்கள் மட்டுமே மத்திய அரசு கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே 2 ஆயிரத்து 429 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசியல் சட்டப்படியான வாய்ப்புகள் கல்வியில் மறுக்கப்பட்டுள்ளது. மேலும் 2018-19ஆம் கல்வியாண்டிலும் 3 ஆயிரத்து 101 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ளது.

# இஸ்லாமியர் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பார்ப்பனர்கள் எதிர்ப்பு

மொழிக்கு மதம், ஜாதி அடையாளங்கள் கிடையாது. அது மக்களுக்கானது. ஆனால் மொழியையும் பார்ப்பனர்கள் விட்டு வைக்கவில்லை.

இந்திய மொழிகளுக்கு எல்லாம் 'தாய்மொழி' கடவுளுக்கான மொழி என்று இவர்கள் கூறும் 'சமஸ்கிருதம்', மக்களுக்கான மொழியல்ல. அது 'தேவபாஷை'. எனவே "பிராமணர்"களுக்கான மொழி என்று வர்ணாஸ்ரமத் திமிர் பேசுகிறார்கள்.

உ.பி.யில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதத் துறையில் ஃபெரோஸ்கான் என்ற இஸ்லாமியர் துணைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இளம் வயது முதலே சமஸ்கிருதம் படித்து, அந்த மொழியில் முனைவர் பட்டம் பெற்றவர். உரிய கல்வித் தகுதி அடிப்படையில் உதவிப் பேராசிரியர் பணிக்கு தேர்வானார். ஆனால் பல்கலைக்கழகப் பார்ப்பன மாணவர்கள் பார்ப்பன பேராசிரியர்கள் இஸ்லாமியர் சமஸ்கிருதத் துறையில் பணியாற்ற எதிர்ப்பு தெரிவித்து வேலை நிறுத்தம் செய்தனர். இரண்டு வாரம் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. உ.பி. முதல்வர் காவி உடை சாமியார் ஆதித்யநாத் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பு அதிகாரியான வினய் பாண்டியா, போராடிய பார்ப்பன மாணவர்களுடன் சமரசம் பேசி அவர்கள் விதித்த கட்டுப்பாடுகள் நிபந்தனைகளை ஏற்று அதன்படி இஸ்லாமிய பேராசிரியர் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் இப்போது பல்கலைக்கழகம் திறக்கப்பட்டுள்ளது.

இதே பல்கலைக்கழகத்தில் உருது துறையில் ஆர்.கே. சர்மா என்ற பார்ப்பனர் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். 1916ஆம் ஆண்டு இந்த பல்கலைக்கழகத்தில் உருது மொழித் துறை தொடங்கப்பட்டது. இந்தத் துறையில் 'இந்து'க்கள் உயர் பதவியில் அமர்த்தப்பட்டு வருகிறார்கள். ஆனால் சமஸ்கிருதத் துறையில் முதன்முதலாக ஒரு இஸ்லாமியர் வந்து விட்டால் துறை 'தீட்டாகி' விட்டது என்று பார்ப்பனர்கள் போர்க் கொடி உயர்த்துகிறார்கள்.

சமஸ்கிருதமே இந்தியாவின் தேசிய மொழியாக வேண்டும் என்கிறது ஆர்.எஸ்.எஸ். பாரத கலாச்சாரத்தின் அடிப்படை சமஸ்கிருத கலாச்சாரம் என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் 'சட்ட திட்டமும்' கூறிக் கொண்டிருக்கிறது.

பார்ப்பனர்களே உயர்வானவர்கள்; அவர்களின் ஆதிக்கப் பண்பாட்டுக்கு அடங்கிப் போவதே பாரத கலாச்சாரம் என்பதே இவர்களின் 'தத்துவம்'. அதைத்தான் இந்த 'பனாரஸ் பல்கலைக்கழக' நிகழ்வும் உறுதிப்படுத்துகிறது.

# இதற்குப் பெயர்தான் காவிப் புனிதமா?

'காவி'ப் புனிதம் கரைபுரண்டு ஓடுகிறது. வள்ளுவருக்கும் 'காவி' உடை போர்த்தி 'இந்து மதக் காவலர்' என்கின்றன, சங்பரிவாரங்கள். இந்து மதம், பார்ப்பனரல்லாத மக்களை வேத அதிகாரத்துக்கு அடிமைப்படுத்தி 'சூத்திரா' என்ற இழிவைத் திணித்து, 'கடவுள் - மதம்' என்ற நம்பிக்கை மாயைக்குள் நமது மக்களை மூழ்கச் செய்திருக்கிறது. உள்ளே மறைந்து கிடப்பது பார்ப்பனியம் என்ற நச்சுப் பாம்பு.

இந்த உண்மைகளைப் பேசினால் இந்து மத எதிர்ப்பாளர்கள் என்று ஓலமிடுகிறார்கள். வீதிகளில் இறங்கி இவர்களைச் சந்திக்க வேண்டும் என்கிறார், எச். ராஜா என்ற பார்ப்பனர். 'காவிப் புனிதம்' பேசும் கூட்டங்கள், அந்தப் புனிதங்களுக்குள் பதுங்கிக் கொண் டிருக்கும் மோசடிக்காரர்களைப் பற்றி ஏன் பேச மறுக்கிறார்கள் ?

- நித்தியானந்தா காவி உடை 'ஆன்மீக'க்காரர். இளம் பெண்களைக் கடத்தி ஆசிரமத்தில் சட்ட விரோதமாக அடைத்து வைத்திருக்கிறார். புகார் தந்த இளம் பெண்களின் பெற்றோர், எச். ராஜா 'குல' வம்சமான பார்ப்பனர்கள் தான். குஜராத் காவல்துறை, காவி நித்தியானந்தா வெளிநாடு தப்பி ஓடி விட்டார், தூதரக உதவியுடன் கைது செய்வோம் என்று கூறுகிறது.

இதுதான் காவிப் புனிதமா ?

- கல்கி அவதாரம் என்று தன்னை அறிவித்துக் கொண்டார், ஒரு காவி உடை பார்ப்பனர். அவர் பெயர் விஜயகுமார். உலகம் முழுதும் காவி 'ஆன்மீக வணிக' நிறுவனங்களைத் தொடங்கினார். அவரது **38** மய்யங்களில் சோதனை நடத்திய வருமான வரித் துறை **23.87** கோடி ரூபாய் ரொக்கப் பணத்தையும் ரூ.**9** கோடி மதிப்பிலான அன்னியப் பணத்தையும் கைப்பற்றியுள்ளது. **1.68** கோடி மதிப்பிலான தங்க நகைகள், **433.47** காரட் வைரமும் (**11.7** கோடி மதிப்பு) கைப்பற்றப்பட்டுள்ளன. 'காவி கல்கி பகவான்', மனைவி, மகள், மருமகன் ஆகியோரும் இதில் தொடர்பு இருப்பதாக வருமான வரித் துறை கூறுகிறது.

இதுதான் காவிப் புனிதமா ?

- தில்லை நடராசன் கோயிலில் நடராஜ தீட்சதர் என்ற 'ஆன்மீக'ப் பார்ப்பனர் தலைமறைவாகியிருக்கிறார். தனது குழந்தையின் பிறந்த நாளுக்காக அர்ச்சனை செய்ய வந்தவர் ஒரு 'இந்து'ப் பெண். அவர் ஒரு செவிலியர். நாள் நட்சத்திரம், குழந்தையின் பெயரைக்கூட கேட்காமல் அர்ச்சனை செய்தார் 'தீட்சதர்'. உண்மையான நம்பிக்கைக் கொண்ட அந்த 'இந்து'ப் பெண், தனது இந்து நம்பிக்கை யின் உந்துதலால் தீட்சதரிடம் கேள்வி கேட்க, தீட்சதரோ அந்தப் பெண்ணைத் தாக்கியிருக்கிறார். தில்லை கோயிலில் தரிசனத்துக்கு வந்திருந்த 'இந்து' பக்தர்களே இதை சகிக்க முடியாமல் காவல்துறையில் புகார் கூறியுள்ளனர். சென்னையில் முக்கிய புள்ளி ஒருவர் வீட்டில் பதுங்கிக் கொண்டு, 'முன் ஜாமீன்' கோரி மனு போடுகிறார், தீட்சதப் பார்ப்பனர்.

தீட்சதர் - பார்ப்பனர் என்றால், 'இந்து'க்களைப் புண்படுத்தலாம்; பக்தரை பெண் என்றும் பார்க்காமல் தாக்கலாம்.

'இந்து' பெண்களைக் கடத்தலாம்; வருமான வரித் துறையை ஏய்க்கலாம்.

இதற்குப் பெயர் 'காவிப் புனிதமா ?' இந்து முன்னணிகளே ? எச். ராஜாக்களே ! நீங்கள் பேசும் 'இந்து'ப் பாதுகாப்புக்குப் பெயர் பார்ப்பனப் பாதுகாப்பு என்ற பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறோம். பதில் உண்டா ?

இந்த 'காவி கிரிமினல்களை' ஏன் கண்டிக்கவில்லை ?

## இணையர் தேவை

இரா. மூர்த்தி; வயது : 50; மணமாகாதவர்; பத்தாம் வகுப்பு; மாத வருமானம் - ரூ.20,000/-. பனியன் நிறுவனத்தில் தொழிலாளி; சொந்த வீடு; தனிநபர்; பெரியார் பணியில் ஆர்வமுடையவர்.

விரும்புவது : 40 வயதுக்கு மேற்பட்ட இணையர். குழந்தைகள் இருப்பது விரும்பத் தக்கது. இயக்கப் பணிக்கு குழந்தைகளுடன் வர ஈடுபாடு உடையவராக இருத்தல் நலம். தொடர்புக்கு : மூர்த்தி - 9843604153

(வி-எம்.)

# ஃபாத்திமா – பார்ப்பனரல்லாதார் மீதான வரலாற்றுக் கொடூரங்களின் தொடர்ச்சி

*அய்.அய்.டி. நிறுவனங்களில் நடந்தேறி வரும் பார்ப்பனியக் கொடூரங்கள் குறித்து திராவிடர் இயக்கங்களும், முற்போக்கு சக்திகளும் தொடர்ச்சியாகப் பேசியும், போராடியும் வந்துள்ளனர். ஆனால், அவற்றின்மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முந்தைய காங்கிரஸ் அரசும், தற்போதைய பாஜக அரசும் துணிந்ததில்லை. அய்.அய்.டி. என்றில்லை, நடுவண் அரசு நிறுவனங்கள், கோயில்கள், நீதிமன்றங்களில் பார்ப்பனிய மேலாண்மையை மறைமுகமாக அங்கீகரித்தே நடுவண் அரசுகள் சுதந்திர காலம் தொட்டு இயங்கி வந்திருக்கின்றன. பார்ப்பனரல்லாதார் மீது பார்ப்பனியம் தொடுக்கும் கொடுமைகளின் வரலாற்றுத் தொடர்ச்சியாகத் தான் ஃபாத்திமாவின் தற்கொலையையும் பார்க்க வேண்டியிருக்கிறது.*

**கீற்று நந்தன்**

நந்தன், வள்ளலாரைக் கொன்றுவிட்டு, ‘ஜோதியில் அய்க்கியமானார்கள்’ என்று பொய்யுரைத்த பார்ப்பனியம்தான், இன்று மாணவர்களின் தற்கொலையை ‘பாடத் திட்டங்களின் அழுத்தம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டார்கள்’ என நாக்கூசாமல் கூறுகிறது.

கடந்த 2019, நவம்பர் 9ஆம் தேதி சென்னை அய்.அய்.டி.யில் விடுதியில் கேரள மாணவி ஃபாத்திமா லத்தீப் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தனது தற்கொலைக்கு சுதர்சன் பத்மநாபன் என்ற பேராசிரியர்தான் காரணம் என்று தற்கொலைக் குறிப்பு எழுதியிருக்கிறார்.

அத்தனை தேர்வுகளிலும் முதல் மதிப்பெண் வாங்கும் திறன் பெற்ற மாணவியாக ஃபாத்திமா திகழ்ந்திருக்கிறார். ஒரு பார்ப்பனரல்லாத பெண் இவ்வளவு திறமையுடன் விளங்குவதை சகித்துக் கொள்ள முடியாத அய்.அய்.டி. பேராசிரியர் மேற்கொண்ட பாரபட்சமான நடவடிக்கைகள், தொந்தரவுகள் காரணமாகவே ஃபாத்திமா தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

ஃபாத்திமா தனது தற்கொலைக் குறிப்பில் சுட்டிக் காட்டியிருக்கும் பேராசிரியர் சுதர்சன் பத்மநாபன், 2017ஆம் ஆண்டு ஓர் இந்துத்துவ அமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் ‘Modern Hindu Phobia - Decolonizing The Tamil Mind’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை சமர்ப்பித்து இருக்கிறார்.

சுதர்சன் பத்மநாபன் ஒரு சங்கி என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. பார்ப்பனர்கள் சங்கிகளாக இல்லாமல் இருந்தால்தான் ஆச்சரியம். ஆர்எஸ்எஸ், இந்துத்துவா, பாஜக இவையெல்லாம் பார்ப்பனர் நலனுக்காக உருவாக்கப்பட்ட வெவ்வேறு பெயர்கள், அமைப்புகள் தானே!

அய்.அய்.டி.யில் காலங்காலமாக பார்ப்பனர்களின் ஆதிக்கம் தான் நிலவி வருகிறது. பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், இயக்குனர், மாணவர் சேர்க்கை என அனைத்திலும் பார்ப்பனர்களின் ராஜ்ஜியம் தான். பிற்படுத்தப்பட்ட, தலித், சிறுபான்மை இன மக்கள் உள்ளே நுழைந்தால் அவர்களுக்கு என்னென்ன கொடுமைகள் நடக்கும் என்பதைத்தான் பேராசிரியை வசந்தா கந்தசாமி முதல் ஃபாத்திமா வரை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

### மதவெறிக்குப் பலியானாரா ஃபாத்திமா?

பேஸ்புக்கில் தோழர்கள் சிலர், ‘மதவெறிக்குப் பலியான ஃபாத்திமா’ என்று பதிவிட்டிருக்கிறார்கள். இது பிரச்சினையின் மூலகாரணத்திலிருந்து விலகிச் செல்வதாகும். பார்ப்பனர்கள் விரும்புவதும் இதைத்தான்.

மதம் என்று சொல்லிவிட்டால், ஆண்ட சாதிப் பெருமை பேசும் இந்து சாதியவாதிகளும் பார்ப்பனக் கூட்டத்துடன் சேர்ந்து கொள்வார்கள்; பிரச்சினை இந்து எதிர் முஸ்லிம் என மாறும்; பார்ப்பனர்கள் தப்பித்துக் கொள்வார்கள்.

ஃபாத்திமாவுக்குப் பதில் பாண்டியம்மாள் இருந்திருந்தாலும் இதுதான் நடந்திருக்கும். பார்ப்பனர்களுக்கு ஃபாத்திமாவும் ஒன்றுதான், பாண்டியம்மாளும் ஒன்றுதான்.

எப்போது, யாருக்கு, எந்த அடையாளம் கொடுக்க வேண்டும் என்பது பார்ப்பனியத்திற்குக் கைவந்த கலை.

**பிற மதத்தினரை ஒடுக்க ‘இந்து மத’ அடையாளம்.**

**தலித் மக்களை ஒடுக்க ‘ஆண்ட சாதி’ அடையாளம்.**

**பார்ப்பனரல்லாதாரை ஒடுக்க ‘சூத்திர’ அடையாளம்.**

இந்த அடையாளங்களுக்குள் சிக்கிக் கொண்டால், நாம் தப்பிப் பிழைக்கவே முடியாது.

அய்.அய்.டி.யில் ‘பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார்’ என்பதுதான் மூலப்பிரச்சினை. அதில் ‘அவாள்’ தெளிவாக இருக்கிறார்கள். நாமும் தெளிவாக இருந்தால்தான், பார்ப்பனரல்லாதார் ஒற்றுமையைக் கட்டி எழுப்ப முடியும்.

அய்.அய்.டிக்கு தமிழ்நாட்டில் இடம் எதற்கு?

மேற்பார்வைக்கு இக்கேள்வியில் நியாயம் இருப்பதுபோல் தோன்றினாலும், உண்மையில் அது நியாயம்தானா என்பதை யோசிக்க வேண்டும்.

இந்திய அரசிற்கு அதிக வரி செலுத்தும் முதல் ஐந்து மாநிலங்களில் ஒன்றாக எப்போதும் தமிழ்நாடு இருக்கிறது. இந்திய அரசின் உள்நாட்டு உற்பத்தியில் (GDP) அதிகப் பங்கு வகிக்கும் மாநிலங்களில் மகாராஷ்டிராவிற்கு அடுத்து இரண்டாம் இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது.

அய்.அய்.டி. என்பது தன்னாட்சி (autonomous) அதிகாரம் கொண்ட நிறுவனமாக இருந்தாலும், அது நிர்வாகத்தில் மட்டுமே தன்னாட்சி கொண்டும், நிதிக்கு நடுவண் அரசைச் சார்ந்தும்தான் இருக்கிறது. அந்நிறுவனத்தில் பார்ப்பனர்களின் நலனுக்காகத் தொழிற்படும் பணத்தில் தமிழர்களின் பங்கு கணிசமாக இருக்கிறது.

சென்னை அய்.அய்.டி.யை மூடக் கோரினால், பார்ப்பனர்களுக்கு இன்னும் வசதியாகப் போய்விடும். தமிழ்நாடு எப்போதும் அவர்களுக்குத் தொல்லை அளிக்கும் மாநிலம்தான். இதே அய்.அய்.டி.-ஐ வேறொரு மாநிலத்திற்கு மாற்றி, தங்களது பார்ப்பன மேலாண்மையை, சுரண்டலை அங்கே தொடர்வார்கள். அதற்கும் தமிழர்களாகிய நம் வரிப்பணம் செலவாகும்.

எய்ம்ஸ் மருத்துவமனை தமிழ்நாட்டிற்கு வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பிக் கொண்டிருக்கும் வேளையில், அய்.அய்.டி.ஐத் தாரை வார்க்க நினைப்பது சரியல்ல.

### அய்.அய்.டி. மோகம்

அய்.அய்.டி.யில் படித்து முடித்தவர்களுக்கு அதிக சம்பளத்தில் வேலை கிடைப்பதைப் பார்த்து, தமிழர்கள் பலரும் தங்கள் பிள்ளைகளை அய்.அய்.டி.யில் சேர்க்க ஆசைப்படுகிறார்கள்.

பெற்றோரின் இந்த ஆசையைப் பயன்படுத்தி தனியார் பள்ளிகள் அடிக்கும் கட்டணக் கொள்ளை மிக அதிகம்.

அய்.அய்.டி. பாடத் திட்டத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லி, கோவில்பட்டியில் இருக்கும் ஒரு பள்ளியில் 11, 12ம் வகுப்புகளுக்கு ஓராண்டிற்கு வாங்கும் கட்டணம் 1.75 இலட்ச ரூபாய்.

அந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு பேராசிரியர் வசந்தா கந்தசாமி, ஃபாத்திமாக்களின் கதைகள் தெரியாது.

அய்.அய்.டி.யில் சேர்ந்து விட்டால், தங்கள் பிள்ளைக்கும் Google, Facebook போன்ற நிறுவனங்களில் 1 கோடி ரூபாய் சம்பளத்திற்கு வேலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில், அவர்கள் 11, 12ஆம் வகுப்புகளுக்கு ரூ 3.50 இலட்சம் செலவு செய்கிறார்கள்.

பார்ப்பனர்களின் குருகுலம்தான் அய்.அய்.டி. என்பது தெரியாமல்...

தாங்கள் எவ்வளவு செலவு செய்து, எவ்வளவு பெரிய கோச்சிங்கில் சேர்த்துவிட்டாலும், பார்ப்பனரல்லாதார் அய்.அய்.டி.யை முடித்து வெளிவர முடியாது என்பது தெரியாமல்...

எத்தனை பெற்றோர்கள் தங்களது சம்பாத்தியத்தை இத்தகைய பள்ளிகளிடம் இழக்கிறார்கள்?

எத்தனை மாணவர்கள் அய்.அய்.டி.யில் சேர முடியாமல் விரக்திக்குத் தள்ளப்படுகிறார்கள்?

நம் அனைவரின் வரிப்பணத்தில் அய்.அய்.டி. எனும் பார்ப்பன “பூதம்” பார்ப்பனரல்லாதோர் மீது நிகழ்த்தும் கொடுமைகள்தான் எத்தனை, எத்தனை?!

என்னதான் தீர்வு?

உயர்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டை கடுமையாக அமல்படுத்தினாலொழிய இத்தகைய கொடூரங்கள் தொடர்வதை நாம் தடுக்க இயலாது.

‘அய்.அய்.டி.யில் மாணவர் சேர்க்கை, ஆசிரியர் நியமனம் என அனைத்திலும் தமிழர்களுக்கு 50% ஒதுக்க வேண்டும், மொத்த இடங்களுக்கு சாதிவாரியான இடஒதுக்கீட்டை முறையாகப் பின்பற்ற வேண்டும், பேராசிரியர்களின் கல்வித் தகுதி, கற்பிக்கும் திறன் குறித்து ஆண்டுதோறும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட வேண்டும், பேராசிரியர்களின் பதவி உயர்வில் வெளிப்படைத் தன்மை, இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும்.’ உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அதற்கான போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து சமூக நீதியை வென்றெடுக்க வேண்டும்.

பார்ப்பனர்களுக்கு, பார்ப்பனரல்லாத எல்லோருமே தீண்டத்தகாதவர்கள், வாழத் தகுதியற்றவர்கள் தான். பார்ப்பனரல்லாதாரின் விழிப்புணர்வும், ஒன்றுபட்ட போராட்டமும் தான் நமக்கான நீதியை பெற்றுத் தரும்.

சமூக நீதிப் போராட்டங்களில் எப்போதும் தமிழ்நாடுதான் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. அய்.அய்.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் சமூக நீதியைக் கொண்டு வருவதற்கும் தமிழர்களாகிய நாம்தான் முன்கை எடுக்க வேண்டும்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 28.11.2019**

## கழகத் தலைவர் ஆறுதல் : திருப்பூர் அகிலன் தாயார் முடிவெய்தினார்

கடந்த 06.11.2019 அன்று முடிவெய்திய திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக அமைப் பாளர் தோழர் அகிலன் தாயார் முனியம்மாள் அவர்களின் இல்லத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்று குடும்பத் தினருக்கு ஆறுதல் கூறினார்.



அப்போது கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில் ராசு, அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, மாதவன், அய்யப்பன், பல்லடம் சண்முகம், உள்ளிட்ட தோழர்கள் உடன் சென்றனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஜாதி–மத–சமூக அரசியல் அதிகாரங்களை வீழ்த்த உறுதி ஏற்போம், வாரீர்!



பச்சை என்றால் எப்படிப் பசுமையையும், உழவையும் குறிக்குமோ... வெள்ளை என்றால் எப்படித் தூய்மையையும், அமைதியையும் வெளிப்படுத்துமோ, கருப்பு என்றால் எப்படி அடக்குமுறைகளின் எதிர்ப்பை அடையாளப் படுத்துமோ.... சிவப்பு என்றால் எப்படி எழுச்சியையும் புரட்சியையும் புலப்படுத்துமோ... அப்படி நீலம் என்றால் சாதிய ஒடுக்குமுறைகளால் புறந்தள்ளப்பட்ட வாழ்க்கையையும், அச்சாதிய அடக்குமுறைகளை மறுத்த எழுச்சியையும் அடையாளப்படுத்துகிறது...

காணாமை, தீண்டாமை, புறந்தள்ளல், ஒதுக்கி வைத்தல் அடக்குமுறை செய்தல், கல்வி வேலை வாய்ப்புகளை மறுத்தல், நட்பு, காதல் ஈடுபாடுகளைத் தடுப்பதோடு பிரித்தல், கொலையும் செய்தல் - என்றெல்லாம் இன்றைய அளவில் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எத்தனை எத்தனை வடிவங்கள்...

இத்தனையையும் மீறி படிப்படியாகத் தன்னை, தன் அறிவை, தன் வாழ்வை அடையாளப்படுத்திக் கொள்ளவும், மீட்டுக் கொள்ளவும் வேண்டிய நிலையில் இருக்கின்றனர், சாதியால் புறந்தள்ளப்பட்ட மக்கள்...

பொதுப்பட மக்கள் மீதான அனைத்து ஒடுக்குமுறைகளைக் காட்டிலும் சாதியால் புறந்தள்ளப்பட்ட மக்களின் மீதான ஒடுக்குமுறைகள் அதிகம்...

இன்றைய பார்ப்பனிய இந்திய அரசும் பன்னாட்டு மூலதன நிறுவனங்களும் சாதி வெறி அதிகாரங்களுக்கு ஆதரவாய் நின்று பார்ப்பனிய வெறி கொண்டு ஆடுகின்றன...

எனவே, தமிழ்நாட்டைச் சூறையாடும் பன்னாட்டு நிறுவனங்களை வெளியேற்ற வேண்டுமென்றால், தமிழினத்தை அடிமைப்படுத்தி யிருக்கும் இந்தியப் பார்ப்பனிய வல்லாட்சியை எதிர்க்க வேண்டுமென்றால், சாதி வழியான அடித்தட்டு மக்களை அடக்கி நசுக்கி வரும் சாதிய வெறித்தனங்களை எதிர்த்தாக வேண்டியிருக்கிறது.

இந்தியப் பார்ப்பனிய, பன்னாட்டு வல்லரசிய, சாதிய அடக்குமுறைகளை எதிர்த்து உண்மையான மக்கள் ஆட்சியை, தமிழ்நாட்டில் நிறுவ வேண்டும் என்றால், உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு அந்த அதிகாரங்களை வீழ்த்தியாக வேண்டியது காலத்தின் கட்டாயம்...

அத்தகையதோர் விரிந்த முயற்சியின் முதற்படியாகத்தான்... கருஞ்சட்டைப் பேரணியும்... இப்போது நீலச் சட்டைப் பேரணியும்...

சாதியை, சனாதனப் பார்ப்பனிய வெறியாட்டங்களை எதிர்த்து மிகக் கடுமையாகப் போரடியவர் என்பது மட்டுமின்றி மிகப் பெருமளவில் பெண்களின் உரிமைகளுக்காகவும் போராடியவர் புரட்சியாளர் அம்பேத்கர்...

சாதி ஒழிப்புக்கான, பார்ப்பனிய ஆதிக்க ஒழிப்புக்கான அவரின் கடும் முயற்சிகள் பல பின்பற்றத்தக்கன... எனவே, வாருங்கள்... அவரின் நினைவு நாளை முன்னிட்டு வரும் திசம்பர் 22ஆம் நாள் அன்று நீலச் சட்டையுடன் புரட்சியாளர் அம்பேத்கரின் போர்க் குரலை வளர்த்தெடுப்போம்...

இந்தியப் பார்ப்பனிய அதிகாரத்தை அடிசாய்ப்போம்! வல்லரசியச் சுரண்டல்களை, நிறுவனங்களை அவற்றின் சூறையாடல்களைத் தடுத்து நிறுத்துவோம்! சாதி மத அரசியல் அதிகாரங்களை வீழ்த்துவோம்!

அணி அணியாய்த் திரள்வோம்... அதிகாரங்களை அடிசாய்ப்போம்...

திசம்பர் 22, 2019 - கோவையில் புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு நீலச் சட்டைப் பேரணி - சாதி ஒழிப்பு மாநாடு

சாதியத்தை வேரறுக்க சமத்துவத்தை நிலைநாட்ட கோவையில் திரள்வோம்!

கொள்கை முழங்குவோம்...

**- பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு**

# இராவணன் முடிவெய்தினார்



பெரியாரியலையே முழு நேரப் பணியாக ஏற்றுத் தொண்டாற்றிய பெரியாரியல் போராளி இராவணன் (45) முடிவெய்தி விட்டார். திருப்பூரிலிருந்து அவரது பெரியாரியல் பயணம் தொடங்கியது. தமிழ்நாடு திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் என்று தொடர்ந்து செயல்பட்டவர்.

மதுரைக்கு அருகே உள்ள அதிகாரப்பட்டி என்ற கிராமத்தைச் சார்ந்த இராவணன், திருப்பூருக்குப் பணிக்கு வந்தபோது, ‘பெரியாரிஸ்டாக’ மாறினார். 15 ஆண்டுகாலம் தனது குடும்ப உறவுகளைத் துண்டித்துக் கொண்டு இயக்கத்தோடு இணைந்து முழு நேர ஊழியராக பெரியாரியக்கங்களில் களப்பணியாற்றினார்.

2007ஆம் ஆண்டு தஞ்சையில் அன்றைய பெரியார் திராவிடர் கழகம், ஜாதி ஒழிப்பு மாநாடு-பேரணி ஒன்றை நடத்தி சட்ட எரிப்பில் சிறைச் சென்ற போராளிகளுக்கு விருது வழங்கி கவுரவித்தது. அப்போது திருப்பூரில் தனது வேலையை உதறிவிட்டு, முழு நேரப் பணியாற்ற கழகத்துக்கு வந்து மாநாட்டு அலுவலகப் பொறுப்பேற்று செயல்பட்டார். அது முதல் எந்தப் பயனையும் எதிர்பார்க்காது முழு நேரப் பணியாற்றி வந்தார். திராவிடர் விடுதலைக் கழகத்திலும் முழு நேரப் பணியாற்றி வந்தவர், ‘காட்டாறு’ என்ற குழு பிரிந்த போது அவர்களுடன் சென்று பணியாற்றினார். ‘காட்டாறு’ குழுவில் இணைந்து செயல்பட முடியாத நிலையில் அதிலிருந்து விலகி சுமார் ஓர் ஆண்டுக்கு முன் சென்னை வந்து ‘நற்றிணைப் பதிப்பகத்தில்’ பணியாற்றி வந்தார். மீண்டும் திராவிடர் விடுதலைக் கழகத்துடன் உறவு கொண்டு சென்னை மாவட்டக் கழகத் தோழர்களுடன் நெருங்கிப் பழகி மீண்டும் கழகத்தில் இணைந்து பணியாற்ற விரும்பினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோரைச் சந்தித்து உளம் திறந்து பேசினார்.

சென்னை மாவட்டக் கழக அலுவலகமான பத்ரி நாராயணன் படிப்பகம் அருகிலேயே வீடு வாடகை எடுத்துத் தங்கினார். கடந்த நவம்பர் 17ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மதியம் தனது வீட்டில், நண்பருடன் மதிய உணவு அருந்திவிட்டு பேசிக் கொண்டிருந்தபோது நெஞ்சு வலி ஏற்பட்டவுடன் நண்பர் உதவியுடன் இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். செய்தி அறிந்த கழகத் தோழர்கள் மாவட்ட செயாளர் இரா. உமாபதி, விழுப்புரம் அய்யனார் மற்றும் தோழர்கள், உடனே மருத்துவமனைச் சென்று மருத்துவர்களிடம் பேசி உடனடி சிகிச்சை கிடைக்க ஏற்பாடுகள் செய்தனர். இருதயத்தில் மூன்று அடைப்புகள் இருப்பதை உறுதி செய்த மருத்துவர்கள், ‘ஆஞ்சியோ பிளாஸ்’ சிகிச்சை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினர். இதற்கிடையே செய்தி அறிந்த இராவணன் சகோதரர்கள், உறவினர்கள் சென்னை வந்து மதுரைக்கு அழைத்துப் போய் சிகிச்சை அளிப்பதாக முடிவு செய்தனர். 15 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு சொந்த கிராமத்துக்குச் சென்றார். இராவணன் ஊர் சென்றவுடன் திடீர் மாரடைப்புக்குள்ளாகி முடிவெய்திவிட்டார்.

பெரியாரியத்துக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட கொள்கைத் தோழரை இளம் வயதிலேயே இழந்து நிற்கிறோம். ஈடு கட்ட இயலாத இழப்பு என்ற சொற்றொடருக்கு முழு நியாயம் வழங்கியிருக்கிறார் தோழர் இராவணன். திராவிடர் விடுதலைக் கழகம் வீரவணக்கம் செலுத்துகிறது.

## வெளிவந்து விட்டது
## ‘நிமிர்வோம்’ – நவம்பர் 2019 இதழ்




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745 / 7299230363 / 7373684049

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
**சிந்தாமணி சில்க்ஸ்**
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 28th November 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN